சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 21.04.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 12350/E/2023**

திரு.சே.கிருஷ்ணன் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சி மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருவெறும்பூர் வட்டம், திருச்சி மாவட்டம்.

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 24.04.2025 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொதுத் தகவல் அலுவலர் திருமதி.பெ.பாக்கியலட்சுமி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருவெறும்பூர் வட்டம் அவர்கள் இவ்வாணையத்தில் 22.07.2025-ல் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், 24.04.2025 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவுப்படி, இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள தகவலகளில் இனம் 1-ல் ஆ, இ. ஈ மற்றும் இனம் 2-க்கான தகவல் தொடர்பான ஆவணங்களை சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் 10.06.2025 அன்று பார்வையிட

பொதுத் தகவல் அலுவலரின் 02.06.2025 தேதியிட்ட கடிதம் மூலம் மனுதாரர் அழைக்கப்பட்டுள்ளார். அதன்படி மனுதாரரும் 10.06.2025 அன்று திருவெறும்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் கள ஆய்வுக்கு ஆஜராகி கிராமக்கணக்குளை கள ஆய்வு செய்து தகவல்களை பெற்றுக்கொண்டுள்ளதாகவும், தந்நம் செட்டில்மெண்டுக்கு முன்புள்ள ஆவணங்கள் திருவெறும்பூர் வட்டாட்சியர் அலுவலகம் என்ற பொது அதிகார அமைப்பின் பராமரிப்பில் இல்லை என்ற தகவல் பொதுத் தகவல் அலுவலரின் ந.க.ஆ2/2191/2023, நாள் 10.06.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், ***மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடம் சமர்ப்பித்துள்ள 10.06.2025 தேதியிட்ட கடிதத்தில், 10.06.2025 அன்று திருவெறுமபூர் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் முன் ஆஜராகி வழக்கு எண்.SA 12350/E/2023 தொடர்பான கிராம கணக்குகளை சட்டப் பிரிவு 2(j)-ன்படி கள ஆய்வு செய்ததாகவும், தான் கோரிய தகவல்கள் குறித்து திருவெறும்பூர் வட்டாட்சியர் அலுவலக கடிதம் ந.க.ஆ2/2191/2023, நாள் 10.06.2025 தேதியிட்ட கடிதம் மூலம் தகவ்லகளை பெற்றுக்கொண்டதாக தெரிவித்துள்ளார்***.

3. மேலும், 24.04.2025 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவுப்படி, பொதுத் தகவல் அலுவலர், திரு.ச.அதியமான் கவியரசு, மாவட்ட ஆட்சியின் நேர்முக உதவியாளர் (பொது), திருச்சிராப்பள்ளி அவர்கள் இவ்வாணையத்தில், 10.03.2026 அன்று நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

4. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், 24.04.2025 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவுப்படி, இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள (இனம் 1(அ)-வில் கோரியுள்ள) நாவல்பட்டு கிராம சர்வே எண்.261, 330 மற்றும அதன் உட்பிரிவுகளுக்கான SLR ஆவண நகல் தொடர்பாக மனுதாரர் 04.03.2026 அன்று கள ஆய்வு செய்து கொள்ள மனுதாரருக்கு 02.03.2026 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனுதாரர் நேரில் ஆஜராகி தகவல ஆணைய உத்தரவில் தெரிவித்துள்ளவாறு தகவல் வழங்குமாறு தெரிவித்துவிட்டு வாக்குமூலம் ஏதும் அளிக்காமல் சென்றுவிட்டதாகவும், ***இந்நேர்வில் திருவெறும்பூர் வட்டம், நாவல்பட்டு கிராமத்திற்கான SLR ஆவண பதிவேட்டின் சர்வே எண்.311 உடன் முடிவடைவதால், சர்வே எண்.330 SLR பதிவேட்டில் இடம்பெறவில்லை என்ற விபரத்துடனான பிரமாண பத்திரமும், மற்றும் திருவெறும்பூர் வட்டம், நாவல்பட்டு கிராமம் சர்வே எண்.261-க்கான SLR ஆவண நகலும் பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), திருச்சி அவர்களின் ந.க.உ4/RTI/242/16733/2023, நாள் 05.03.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் பதிவு செய்கிறது***.

5. எனவே, இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தொடர்பாக இவ்வாணையத்தால் 24.04.2025 தேதியிட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், (1) பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), திருச்சி மற்றும பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருவெறும்பூர் ஆகியோர், பொது அதிகார அமைப்பின் பராமரிப்பில் உள்ளவாறு மனுதாரருக்கு தகவல் வழங்கியுள்ளனர் என்பது இன்றைய ஆவண பரிசீலனையில் தெரியவருகிறது.

6. எனவே, வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12350/E/2023</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சி மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருவெறும்பூர் வட்டம், திருச்சி மாவட்டம்.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.சே.கிருஷ்ணன், த/பெ.மா.சேது,
2/89, நவல்பட்டு பர்மா காலனி,
திருச்சி - 16.

Copy to: File MP/PA,